விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 வைகாசி 24 ஷ்பா 14 இதழ் 114

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7—6—82


## இனக் கலவரத்தைத் தூண்ட தோட்டப் பகுதிகளில் முயற்சி

(கொழும்பு)

தோட்டப்பகுதிகளில் கலவரத்தைத் தூண்ட சில சக்திகள் முயற்சி எடுத்து வருவது பற்றி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தோட்டப்பகுதிகளில் கலவரத்தைத் தூண்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இந்த முயற்சியைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இ. தொ. க. நம்பிக்கை தெரிவித்துள்ளது

சிறுபான்மைச் சமுகத்தினருக்கு நன்மையளிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் வேளையில் இனத்துவேஷ முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும், இ. தொ. க. கவலை தெரிவித்துள்ளது. [க]

## 'நேர்மையான நிருபர்': டி. ஐ. ஜி. 'சுந்தர்' அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வந்திருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபா திரு. ஆர். சுந்தரலிங்கம் அச்சுவேலியி

(8ம் பக்கம் பார்க்க)

# கைதானஇளைஞர்: நாடுகடத்தல்

# சாத்தியம் இல்லை!

## சந்திரகாசன் தகவல்

### 'வழக்குவிசாரணைமுடிய ஒருவருடமாகலாம்'

(நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம்)

**சென்னையில் கைது செய்யப்பட்டு இப்பொழுது நீதிமன்றக் காவலிலிருக்கும் இலங்கை தீவிரவாத தமிழ் இளைஞர்களை நாடு கடத்தும் சாத்தியக் கூறுகள் இல்லையென்று சென்னையிலிருந்து நேற்று கொழும்பு திரும்பிய சிரேஷ்ட சட்டத்தரணி செ. சந்திரகாசன் என்னிடம் தெரிவித்தார்.**

**கைதான இளைஞர்களை நாடுகடத்த வேண்டாம் என்று ஏகோபித்த குரல் அங்கு எதிரொலிக்கும்போது, தமிழகத்தின் எதிர்ப்பை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சம்பாதிப்பார் என்றுஎதிர்பார்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.**

பிரபாகரனும், சிவகுமாரனும் கைதுசெய்யப்பட்டதை தொடர்ந்து சென்னைக்குச் சென்றிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி செ. சந்திரகாசன் நேற்று பகல் கொழும்பு திரும்பினர்.

சென்னையில் கைதுசெய்யப்பட்டு இப்பொழுது வழக்குகளை எதிர்நோக்கியுள்ள இலங்கை தீவிரவாத தமிழ் இளைஞர்கள் பற்றி கேட்ட போதே அவர்மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்தார்.

### வழக்கறிஞர்கள் கோரிக்கை

''கைதான இளைஞர்கள் சார்பில் ஆஜராகியுள்ள சென்னை வழக்கறிஞர்கள் மத்திய அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையில்; இளைஞர்களை நாடு கடத்தவோ அல்லது இலங்கை அரசிடம் திருப்பி ஒப்படைக்கவோ வேண்டாம் என்றும் அரசியல் புகலிடம் அளிக்குமாறும் கேட்டுள்ளனர்'' என்று தெரிவித்த சட்டத்தரணி சந்திரகாசன் மேலும் கூறியதாவது:

மேற்படி மூன்று கோரிக்கைகளை சென்னை வழக்கறிஞர்கள் மட்டுமின்றி அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மகாநாடும் வலியுறுத்தியுள்ளது. தவிர அண்ணா தி. மு. கழகமும் இதே கோரிக்கையை விடுத்துள்ளது.

### இந்திராவைச் சந்தித்தனர்

''தி. மு. கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதியும் இதே மாதிரி கோரிக்கையை விடுத்திருந்ததுடன் தி. மு. கழக எம் பிக்களான திரு. தண்டபாணி, திரு. அன்பரசு, ஆகிய இருவரும் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார். இரண்டு எம். பி. க்களும் பிரதமரைச் சந்தித்து கைதான தமிழ் இளைஞர்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறினர்.

''இந்த நிலையில் முழுத்தமிழகத்தையும் எதிர்க்கும் நடவடிக்கை எதனையும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மேற்கொள்வார் என்றுஎதிர்பார்க்க முடியாது.

### ஒரு வருடம் ஆகலாம்

கைதான இளைஞர்கள் இப்பொழுது நீதிமன்றக் காவலில் உள்ளனர். வழக்கு விசாரணை முடிவடைய ஒரு வருடத்துக்கு மேல் ஆகலாம். இதன்பின்னரே இந்த இளைஞர்களின் எதிர்காலம் பற்றியபிரச்னை எழும்'' என்று சட்டத்தரணி செ, சந்திரகாசன்தெரிவித்தார். (ம)

## விசா சலுகை ரத்து?

சென்னை, ஜூன், 5

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு விமான மார்க்கமாக விஜயம் செய்யும் சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்பட்டுவரும் 'விஸா' சலுகை விரைவில் ரத்துச்செய்யப்படலாம் எனத் தெரியவருகிறது.

சுற்றுலாப் பயணிகளைஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு விமானத்தில் வரும் பயணிகள் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் 'விசா' பெறுமலே இங்குவர சலுகை வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால சிலசம்பவங்கள் தொடர்பாக இச் சலுகை ரத்துச்செய்யப்படவிருக்கிறதாம்.

## ஐ. நா. தீர்மானத்தை மீறி இஸ்ரேல்தொடர்ந்து தாக்குதல்!

**பெய்ரூட், ஜூன். 6**

**ஐ. நா. பாதுகாப்பு சபையின் யுத்தநிறுத்த தீர்மானத்தை மீறி, இஸ்ரேலிய படைகள், லெபனானிலுள்ள பலஸ்தீனிய பகுதிகளில் மூன்றுவது தினமாக இன்று தாக்குதல் நடத்தியுள்ளனர்.**

இஸ்ரேலிய படைகள் தெற்குலெபனானில் புகுந்து முன்னேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. யுத்தநிறுத்ததீர்மானம் இன்று காலை ஒன்பது மணிக்கு அமுலுக்கு வந்தபின்னரும், இஸ்ரேல் தாக்குதலில் ஈடுபட்டது. இதேசமயம் பலஸ்தீனிய விடுதலைஇயக்கம், தமது படைகளை யுத்த நிறுத்தம் செய்யுமாறு பணித்துள்ளது.

இதற்குமுன்னர் இஸ்ரேலிய ஜெட் விமானமொன்றைச் சுட்டுவீழ்த்தியதாக, பலஸ்தீனிய விடுதலை இயக்கம் அறிவித்தது. இதனை இஸ்ரேலும் ஒத்துக் கொண்டிருக்கிறது.

இஸ்ரேல், தொடர்ந்து மூன்றுவது தினமாக லெபனானின் தென்கிழக்கு பகுதிகளில் குண்டுவீசித் தாக்கியுள்ளது.

பலஸ்தீனிய கெரில்லாத் தாக்குதலின்போது வட இஸ்ரேலில் சுமார் 100 பேர் வரை காயமடைந்ததுடன், ஒரு இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் இஸ்ரேலிய தூதுவரை சுட்டுக்கொல்ல முயற்சி நடந்ததைத் தொடர்ந்து லெபனானில் தாக்குதல் நடைபெற்று வருகிறது. [க]

## காரைநகருக்கு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஏற்படுத்த முயற்சி

(பண்டத்தரிப்பு)

காரைநகர் பகுதிக்கு தனியானதொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஒழுங்குகளை வட்டுக்கோட்டை எம். பி. திரு தா. திருநாவுக்கரசு மேற்கொண்டுள்ளார். இதற்கான புள்ளி விபரங்களையும் மற்றும் எல்லை போன்ற விபரங்களையும் திரு. திருநாவுக்கரசு சேகரித்து வருகின்றார்.

தற்போது காரைநகர் பகுதி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இருந்து வருகின்றது.

காரைநகர் மக்களின் வசதியை முன்னிட்டு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் காரைநகர் மடத்துவெளி அம்மன் ஆலயத்திற்கு பக்கத்தில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இங்கு நிரந்தரமான உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நிறுவப்பட வேண்டுமென்று இப்பகுதிமக்கள் வட்டு எம் பி திரு தா. திருநாவுக்கரசுவிடம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து அதற்கான முயற்சிகளில் திரு. திருநாவுக்கரசு ஈடுபட்டு வருகின்றார். (க)

## யாழ். பௌத்த விகாரைகள் அபிவிருத்தி செய்யப்படும்

### போசன் வைபவத்தில் ஜனாதிபதி

[அநுராதபுரம்]

யாழ்ப்பாணத்தில் மூன்று பௌத்த விகாரைகள் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. திரிபீடகம் தமிழில் மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிகுந்தலையில் 'போசான்' தினத்தையொட்டி நடந்த வைபவத்தில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினர்.

மிகுந்தலையில் திரிபீடகம் பராயணம் செய்யும் முக்கிய வரலாற்று நிகழ்ச்சி நேற்று ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியில், ஜனாதிபதி, பிரதமர் அமைச்சர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில்:

அனுரதபுரத்தில் அண்மையில் சிங்கள பால மண்டலயா ஐக்கிய தேசிய கட்சியையும், தலைவர்களையும் வன்மையாகக் கண்டித்ததையிட்டு கவலையடைகிறேன்.

''பௌத்த மதத்தையும், சிங்கள இனத்தையும் முன்னேற்ற எனது அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்துவந்துள்ளது. சிங்கள பால மண்டலயாவுக்கு அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கிவந்துள்ளது. இதேபோல் சிங்கள மக்களின் நன்மைக்கு பாடுபடும். இயக்கங்களுக்கு அரசு ஒத்துழைப்பு வழங்கும்.

''பௌத்த சமயத்தையும் சிங்கள இனத்தையும் பாதுகாக்க முயற்சி எடுக்கும்போது ஏனைய சமுகத்தினரையும் கவனத்தில்கொள்ளவேண்டியது அவசியம்'' என்றார்.

பிரதமர் ஆர். பிரேமதாசா, கலாச்சார அமைச்சர் திரு. ஹாருள்ளே, மிகுந்தலை எம். பி. திரு. தயாவாலகம்பா ஆகியோரும் பேசினர். (க)

# வரி விளம்பரம்

## தேவை

Refrigerator Technicians (குளிர்சாதனப்பெட்டி மெக்கானிக்குகள்) குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவைசெய்தால் உற்பத்திச் சாலையில் பயிற்சி அளிக்கக்கூட ஒழுங்கு செய்யப்படும் அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து நற்சான்றிதழ்களுடன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3435

வான் சாரதி — நடுத்தர வயதுள்ளவரும், வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகளில் உதவிசெய்யக்கூடிய குடிப் பழக்கமில்லாதவர்களுமே நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3455

மோட்டார் சைக்கிள் மெக்கானிக் நன்கு – அனுபவமுள்ளவர்கள் மட்டுமே எதிர்பார்க்கும் ஊதியத்தைக் குறித்து நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3456

ஸ்ரூடியோவில் எல்லா வேலைகளும் தெரிந்த இளைஞரும் பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. தரன்ஸ்ரூடியோ, 9, நவீனசந்தை, யாழ்ப்பாணம். போன். 7858. (3444)

டாக்டர் வீட்டில் சமையலில் உதவிபண்ண நற்குணமுள்ள பெண் தேவை. வயது 15 முதல் 45 வரை ஏற்கப்படும். தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். எஸ்.கந்தையா, 'சீவஸ்தான்' கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3473

## விற்பனைக்கு

வற்றாப்பளை அம்மன் கோவிலில் அமைந்திருக்கும் எமது விளம்பரநிலையத்தில், அண்ணா கோப்பி, அண்ணா பத்தி அண்ணா பற்பொடி, சோயாரின் மற்றும் எமது உற்பத்திப் பொருட்களை வாங்கி இனாம் பொருட்களையும் பரிசுக் கூப்பன்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். 3417

நீர்வேலியில் உள்ள அச்செழுவில் கவடிஓலை என்னுமிடத்தில் நல்ல நிலையிலுள்ள ஆறே முக்கால் பரப்புடனும், கிணற்றுடனும் கூடியவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி சின்னத்துரை, சிவா கிளினிக், வாகையடி, உடுப்பிட்டி. 3461

## மூக்குக்கண்ணாடி யாருடையது?

மாவிட்டபுரம் தபால் நிலையத்திற்கு அண்மையில் பஸ் தரிப்பு நிலையத்தில் மூக்குக் கண்ணாடி ஒன்றை யாழ். கன்னாதிட்டியைச் சேர்ந்த சி. பிரதாபன் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அத்தாட்சிகாட்டிப்பெற்றுக்கொள்ளலாம்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் ஒழுங்கையில் உள்ள 10.ம் இலக்கக் காணியும் அதிலுள்ள வீடும் எனது பொறுப்பிலேயே இருக்கிறதென்றும் அது சம்பந்தமாகக் கொடுக்கல் வாங்கல் செய்ய வேறெருவருக்கும் உரிமையில்லையென்றும் அப்படி யாராவது கொடுக்கல் வாங்கல் செய்தால் நான் அதற்குப் பொறுப்பாளியல்லவென்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

திருமதி
உத்தரகோசமங்கை
நாகலிங்கப் செட்டியார்,
வீரபத்திரகோவிலடி,
கோப்பாய் தெற்கு.
3474

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை தையிட்டிப்புலம் என்னுமிடத்தைச் சேர்ந்த சேனாதிராசா இராமேஸ்வரன் பெண் சரஸ்வதிதேவி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்...

மரணமெய்தியவர்

மயில்வாகனம் பொன்னம்பலம் 'சரஸ்தான்', தையிட்டிப்புலம், தெல்லிப்பழை

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
வழக்கு இல. ரி/129

எதிராக

1. மயில்வாகனம் பொன்னம்பலம் பெண் செல்லம்மா தெல்லிப்பழை
2. சேனாதிராசா இராமேஸ்வரன் கெலனியா, கொழும்பு

எதிர்வாதிகள்

மேற்படி இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதகிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆனிமாதம் 9ம் திகதி காலை 9 மணிக்கு அல்லது அதற்குமுன் இந்நீதிமன்றத்தின்முன்னரேதோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

சு. வ. கணேசன்
பதிவாளர்

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 8ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

தயாரித்தவர்
கு. விசுவலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
3443

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

# "முல்லை முசுட்டை இலைவகையைப் புறக்கணிக்காதீர்"

[பளை]

நம் நாட்டில் சத்துவகையுடைய முல்லை, முசுட்டை, தூதுவளை ஆகியன இருக்க மலைநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் படும் சத்துகுறைவுள்ள கோவா வகைகளை மக்கள் அதிகபணம் கொடுத்து வாங்கி விரும்பி உண்கின்றனரென கிளிநொச்சி கொத்தணிப்பாடசாலை அதிபர் திரு. ஆர் சின்னத்தம்பி சென். திரேசா மகளிர் கல்லூரியில் அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் தலைமையில் நடந்த உலக சூழல் தினவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பலன் தரும் மரங்களை நாட்டும்படி மாணவர்களுக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்த அவர், கல்லூரி அதிபர் இவ்விழாவைத் திறம்பட திட்டமிட்டு செயலாற்றியமையையும் பாராட்டினார்.

ஆசிரியை பண்டிதை திருமதி அருளானந்தம் மாணவர்கள் சூழலை எப்படி சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென விளக்கி கூறினார்.

மேல்வகுப்பு மாணவிகளான செல்வி அருட்சோதி சேதுபாண்டியன், செல்வி கணேஸ்வரி மயில்வாகனம் ஆகியோரும் பேசினர். (அ)

# விற்பனையாளர்கள் தேவை

பின்வரும் இடங்களுக்கு 'ஈழநாடு' விற்பனை செய்வதில், ஆர்வமுள்ளவர்களிடமிருந்து **விண்ணப்பங்கள்** கோரப்படுகின்றன. முற்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் **விண்ணப்பிக்கவும்:**

- ✶ துணுக்காய்
- ✶ வவனியா
- ✶ முறிகண்டி
- ✶ மாங்குளம்
- ✶ நெடுந்தீவு
- ✶ அல்லைப்பிட்டி

பொதுமுகாமையாளர்
ஈழநாடு, யாழ்ப்பாணம்.
3436

# ஏல விற்பனை
## மீன்பிடி வள்ளமும் வலைகளும்

1982-ம் ஆண்டு ஆனித்திங்கள் 12-ம் நாள் சனிக்கிழமை காலை 10 மணியளவில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை பருத்தித்துறை மீன்பிடிக் கூட்டுறவுச் சங்க வளவில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. வள்ளம்: இல. CNJJ/BLPB/124, 17 1/2 அடி இழைக்கண்ணாடி.
   சீநோர்
2. எந்திரம்: இல. 2362 எவன்றூட்—6 H. P. மண்ணெண்ணெயில் இயங்குவது
3. வலைகள்: 27 PLY × 7''—2
   21 PLY × 7''—2
   27 PLY × 6''—
   21 PLY × 5''—1

இவை தனித்தனியாகவோ, ஒன்றாகவோ ஏலமிடுவதற்குச் சூழ்நிலைக்கேற்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இவற்றைப் பார்வையிட விரும்புவோர் முன் அறிவித்தலுடன் மக்கள் வங்கியின் பருத்தித்துறை முகாமையாளரைச் சந்தித்து ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம்.

முகாமையாளர்
மக்கள் வங்கி, காங்கேசன்துறை.
3310




# பரிசு பெறும் சிறுவன்

[சுழிபுரம்]

எட்டு வயது நிரம்பிய சிறுபையன் சுந்தரநுபூதி ஐம்பத்தொரு பாடல்களையும் பாடி அதி விசேட பரிசைப் பெற்றுக் கொண்டார். வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெற்ற சுந்தரநுபூதி மனனப் போட்டியிலே செல்வன் என். நடராசா என்பவரே பரிசைத் தட்டிக்கொண்டவராவார். [கு]

# இளைஞர்களின் சக்தியே மேலானது

[சுழிபுரம்]

"இளைஞர்களின் மத்தியில் கண்ணியம், கட்டுப்பாடு, நல்லொழுக்கம் என்பன நிலவ வேண்டும். இளைஞர்களின் சக்தி ஏனைய சக்திகளையும் விட மேலானது. இவர்கள் யாவரும் ஒற்றுமையாகவும் கட்டுப்பாட்டுடனும் செயல்படும் பட்சத்தில் எங்கள் பகுதியிலுள்ள அரிய வளங்களைப் பயன்படுத்தி பாரிய வளர்ச்சியைக் கண்டுகொள்ளலாம். திருவடிநிலையிலுள்ள மணல் கண்ணாடி உற்பத்திக்கு உகந்த மணல் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மண்ணைப் பயன்படுத்தி ஒரு கண்ணாடித் தொழிற்சாலை சுழிபுரத்தில் அமைவது சாலவும் பொருத்தமாகும்" கிராமோதயச்சபை இதற்காக பாடுபடவேண்டும். இவ்வாறு சுழிபுரம் கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. மு சிவராசா சுழிபுரம் பருளாய் இளைஞர் நலன்புரிச் சங்க ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. கே. வீமதேவன் விழாவிற்கு தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக யாழ். கச்சேரி பொறுசனத் தொடர்பு அதிகாரி திரு. சு. சண்முகசுந்தரம் கலந்துகொண்டார். திருவாளர்கள் வி. குமாரவேலு, சி. மார்க்கண்டு, சு. சண்முகசுந்தரம் ஆகியோரும் பேசினர். [கு]

# கிராமோதய சபைக்கூட்டம்

(மனார்)

மன்னார் பட்டினம் கிழக்கு மேற்கு ஆகிய இரு கிராமோதய சபைகளினதும் முதலாவது கூட்டம் 7-ம் திகதி மன்னார் பட்டினசபை மண்டபத்தில் நடைபெறும்

மன்னார் மாவட்டத்தில் கிராமோதய சபைகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது கிராமோதய சபைக் கூட்டங்கள் மன்னார் பட்டினத்திலேயே இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

● ● ●

(மன்னார்)

சிமெந்துத் தட்டுப்பாடு காரணமாக மன்னார் பட்டித்தோட்டத்தில் புதிதாக நவீன வசதிகளுடன் நிறுவப்பட்டு வரும் மன்னார் பஸ் சாலைக்கான கட்டிட வேலைகள் தடைப்பட்டுள்ளன.

இப்புதிய சாலையின் நிர்மாண வேலைகளை முடிப்பதற்கு 7200 'பக்கற்' சிமெந்து தேவை என்றும் சிமெந்துக் கூட்டுத்தாபனம் சிமெந்து இல்லை என்று தெரிவித்துள்ளது என்றும் நிர்மாண வேலைகளை முடிப்பதற்கான சிமெந்தினைப் பெற்றுத்தருமாறும் கோரப்பட்டுள்ளது.

புதிய சாலையின் நிர்மாண வேலைகளுக்குத் தேவையான சிமெந்தைப் பெறுவதற்காக சிமெந்துக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக முதூர் எம். பி யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம்.ஈ.எச் மஹ்ரூப் தெரிவித்தார்.

# இயற்றாலை கொலை வழக்கு: "காயமடைந்தவரின் மனைவி எதிரிகளின்பெயரை தந்தார்"

[சாவகச்சேரி]

யாழ், வைத்தியசாலையிலிருந்து தகவல் கிடைத்ததும் நான் மூதன்முதலாகக் காயமடைந்தவரின் வீட்டுக்குச் சென்றேன். அங்கே காயமடைந்தவரின் மனைவி வள்ளிப்பிள்ளை எதிரிகளின் பெயர்களைத் தந்தார்.

இயற்றாலைக் கொலைவழக்கில் சாட்சியமளிக்கும்போது சாவகச்சேரிப் பொலிஸ் உத்தியோகத்தர் சித்திரவேல் பெர்னாந்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில்விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 81ம் ஆண்டு பெப்ரவரி 2ம் திகதி தாவளை இயற்றாலையைச் சேர்ந்த சங்கக் கடை மனேச்சர் சிதம்பரநாதன் வன்னியகுலசிங்கம்என்பவரை அவ்வூரைச் சேர்ந்த இரத்தினசிங்கம், பாலசிங்கம் என்பவர்கள் இரும்புப் பைப்பால் தாக்கியும் கத்தியால் வெட்டியும் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயவும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர். 1ம் எதிரியின் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாய சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்கையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது; பொலிஸ் நிலையத்திலிருந்து ஆறுமுகம் சின்னத்துரை என்னைக் கூட்டிச் சென்றார். அன்று இரவு இரு எதிரிகளையும் தேடி அவரவர் வீட்டிற்குச்சென்றேன். அங்கே அவர்களில்லை. அடுத்தநாள் 25ம் திகதி சென்று மனைவியிடமிருந்து திறப்புக்கோர்வை ஒரு பாக்வில் சிட்டைப் புத்தகம் என்பவற்றைக் கைப்பற்றினேன். இச்சான்றுப் பொருட்களைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

இறந்தவர் வீட்டிற்கு நேரே வாகனம் செல்லுமோ என்பது என்னாற்கூறமுடியாது. கோவிலடியிலிருந்து இருபாதைகள் போகிறது. ஒன்று வண்டிப் பாதை மற்றது ஒற்றையடிப் பாதை பாதை எவ்வளவு அகலம் என்பது என்னாற்கூறமுடியாது சாதாரணமாகச் சனங்கள் போய்வரக்கூடிய பாதை. ஜீப்பிலிருந்து இறங்கிப்போக வலதுபுலத்தில் ஒரு குளமிருந்தது. குளத்தைத்தாண்டியதும் காடு இருந்தது சிறு கோவில் வெட்டவெளியில் இருப்பதை நான் அவதானிக்கவில்லை.

இருபக்கமும் சிறுபத்தைகள் இருந்தன. 15 அடிவரை உயர்ந்தகாடுகள் அங்கில்லை. இந்த இடத்தைக் கூட்டிச் சென்று காட்டியது. ஆறுமுகம் சின்னத்துரை ஜீப்பால் இறங்கியதும் முதல் இறந்தவர் வீடும் அவர் வீட்டைத்தாண்டி எதிரிகள் வீடும் இருந்தன. ஒன்றரை வருடத்திற்கு முந்திய விடயமாகையால் எல்லாவற்றிற்கும் பதில் கூறமுடியாது. எதிரிகளின் வீடும் எங்கே எந்தப்பக்கம் என்று சரியாகக்கூற முடியாது.

2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனின் குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்குப் பத்து மணிபோல் கிடைத்த தகவல் கொலை சம்பந்தமானதல்ல, தொலைபேசி மூலம் வந்ததால் யார் கூறியது என்பது கூறமுடியாது. இந்த விசாரணைக் கோஷ்டிக்கு நான் தான் பொறுப்பு. ஆனால் நான் போகும்போது பொறுப்பதிகாரியும் என்னோடு வந்தார். அவர் உத்தரவின் பிரகாரம் விசாரணையை நான் மேற்கொண்டேன்.

இறந்தவரின் வீட்டுக்குப் போனபோது பொறுப்பதிகாரியும் என்னோடு வந்தார். அங்கு இறந்தவரின் மனைவிதான் நின்றார். பின் ஆறுமுகம் சின்னத்துரை வந்தார். அந்நேரம் அதேயிடத்தில் வைத்து காலமானவரின் மனைவியினதோ அல்லது சின்னத்துரையினதோ வாக்குமூலத்தை பதியவில்லை. சம்பவஇடம் வரணிச்சந்தையிலிருந்து சுமார் 2 மைல் இருக்கும். இறந்தவர் வீட்டிலிருந்து முக்கால் மைல் தூரம். சம்பவ இடத்திலிருந்து 300யார் தூரத்திற்பால் ஜீப்பை நிற்பாட்டியதிலிருந்து அந்த இடத்திற்கு ஜீப் போகாது என்பது திட்டவட்டமாகக் கூற முடியாது.

இறந்தவர் வீட்டுக்குச்சென்றபோது இறந்தவரின் மனைவி தவிர வேறொருவரும் நிற்கவில்லை. ஆறுமுகம் சின்னத்துரையின் வாக்குமூலம் இறந்தவரின் வீட்டுக் கருகில் வைத்துப்பதிந்தேன். எந்தக் கட்டத்திலாவது இறந்தவரின் வாக்கு மூலத்தை நான் பதியவில்லை.

விசாரணை ஜூன் 30ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது (க)

# "தமிழுலகின் தவச்செல்வர் தாவீது அடிகள்"

(யாழ்ப்பாணம்)

'தாவீது அடிகள் தமிழ் உலகினதும் தவஉலகினதும் தவச்செல்வர், கடந்த ஆனி 2ல் நிலையான கலைக்களஞ்சியமானயாழ் நூலகத்தை மட்டுமல்ல நடமாடும் அறிவுக் களஞ்சியமான தாவீது அடிகளையும் சேர்த்து இழந்த செய்திதமிழ் உலகைஇரட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியது''

இவ்வாறு மாணவ எழுத்தாளர் செல்வன் அமிர்தருஜ் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின்சார்பாகஆசனக் கோவிலில் நடாத்திய தாவீது அடிகளின் 1வது நினைவுதின இரங்கல் பிரார்த்தனையில் பேசுகையில் கூறினர். அவர் மேலும்பேசுகையில்'', ஆன்று அவிந்த சான்றோர் எனக் சங்கத்தில் கூறப்பட்டுள்ள அறிஞர் பற்றியவரைவிலக்கணத்தின் வாழ்க்கை உதாரணம் தாவீது அடிகள். இரட்டைக்கலாநிதிப் பட்டங்கள். பெற்றமுப்பத்து மூன்று மொழிப்பண்டிதர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்து வரலாற்று, பொருளியல் துறைகளுக்கான தங்கப்பதக்கங்கள் பெற்றவர் இத்தனையும் சுமந்தபேரறிஞர் அறிவின் தெளிவால் வாழ்க்கையின் வெறுமையை உணர்ந்து மூலையில் ஒதுங்கி இருந்து மொழியாராய்ச்சி செய்தார். சாதிப்பெயர்கள் பற்றி ஆராய்ந்து ஒரே தமிழ்த்தாயின் தவச்செல்வங்கள் சாதிகவாகக் கூறுபட்டு நின்று ஆற்றலை வலிமையை இழப்பது கண்டு கண்ணீர் வடித்தார். மதங்களின் தலைவர் ஒருவனே என்றார். இவ்வாறாக மானிடத்தின் முழுமையை நேசித்தார். இன + மத + மொழிக்கூறுகளை வெறுத்தார். மானிடத்தின் பொது எதிரியான வறுமையைச்சுட்டிக்காட்டினர் வறுமையை அழித்திடத் தன்னால் இயன்றவரை உழைத்தார். கிறிஸ்தவதுறவியான அவர் கிறிஸ்துவைப்போல் தன்னை ஏழ்மைப்படுத்தினர். அவரால் எழுதப்பட்ட நூல் களைத் தான் உலகறியும் ஆனல்அவர் பசியாற்றிய வயிறுளை உலகுக்குத்தெரியாது அவரது உதவியால் கல்விஅறிவுபெற்றவர்கள் எத்தனையோபேர்'' என்றார். (அ)

# "இலங்கைத் தபால் சேவை ஏனைய நாடுகளிலும் மேல்"

(வவனியா)

''ஏனைய நாடுகளில் நடைபெறும் தபால் சேவையைவிட இலங்கையில் தபால் சேவை மிகவும்திறம்பட நடைபெறுகின்றது. இதற்கு தபால் தந்திப்பகுதியினரின் திறமையே காரணம்'' என வவனியா அரச்அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அஞ்சல் தொலைதொடர்புச் சேவையாளர் சங்கமும், ஆசிய அமெரிக்க சதந்திர தொழில் இயக்கமும் இணைந்து நடத்திய தொழிற்சங்கக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தேரிவித்தார்

வவனியா கூட்டுறவுக்கல்வி நிலையத்தில் திரு. எம். குணநேசம் தலைமையில் இடம்பெற்ற முதல் நாள் கருத்தரங்கை திரு. லோகேஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து மேலும்பேசுகையில்:

இப்படிப்பட்ட இயக்கங்களுடன் அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் சங்கம் இணைந்து கருத்தரங்குகளை தமிழில் நடாத்துவதிஞல் சங்க அங்கத்தினர்கள் மிகவும் நன்மை அடைகின்றார்கள்.

பொதுமக்களுடன் எவ்வாறு இரண்டறக்கலந்து தபால் பகுதியின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்த தபால் பகுதியினரின் திறமையே காரணம் ஆகும் என்றார்.

தொடர்ந்து 4 நாட்களாக கருத்தரங்கு நடைபெற்றது. (கு)

# தமிழீழ போராளிகள் அஞ்சலிக் கூட்டம்

[யாழ்ப்பாணம்

தமிழீழவிடுதலைப் 'போராளிகளின்' அஞ்சலிக்கூட்டம் இம்மாதம் 9-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு வை. சந்திரபாலன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு செ சண்முகநாதன் [தமிழ் மக்கள் ஜனநாயகமுன்னணி], வண, சிங்கராயர் அடிகள், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் [கூட்டணி], திரு. கோவை மகேசன் டாக்டர் எஸ். தர்மலிங்கம், திரு ஈழவேந்தன் [தமிழீழ விடுதலை அணி, திரு. அ. அண்ணமலை [நவசமமாசஜக்கட்சி], திரு. அ. டேவிட்சன் [ஈழமாணவர் பொதுமன்றம்], திரு வி. ஏ கந்தசாமி [கம்யூனிஸ்ட் மா. லெ,] கே திலகவதி [தமிழ் இளைஞர் பேரவை] ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள், (மா[

# "தேசிய சந்தை ஓராண்டில் பெருலாபம் பெற்றுள்ளது"

## பிரதி ஆணையாளர் பெருமிதம்

(அரியாலை)

தனிப்பட்ட வியாபாரிகளின் கெடுபிடிகளிலிருந்து யாழ். மாவட்டத்தில் வாழும் பாவனையாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தேசிய சந்தையின் ஓராண்டு காலத்துக்குள் பலலட்சரூபாவைத்தனது வருமானமாகப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும் என்று விற்பனை அபிவிருத்தித்திணைக்கள யாழ். தேசிய சந்தையின் ஓராண்டு பூர்த்தி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரதி ஆணையாளர் திரு. எஸ். கணேசநாதன் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தேசிய சந்தைக்கு உற்பத்தியாளர் நியாயமானவிலையில் பொருட்களைத் கொடுக்க முன்வந்தமையும் பாவனையாளர்கள் வழங்கிய ஒத்துழைப்புமே இத்தகைய லாபத்திற்குக் காரணமாகும் என்றார்.

யாழ்ப்பாண விற்பனை அதிகாரி திரு. எஸ் சிறில் பேசுகையில் இந்தத் தேசிய சந்தையை யாழ்ப்பாணத்திலமைக்க முற்பட்ட பொழுது தம்மாலான பூரண ஆதரவு நல்கிய யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் யாழ். மாநகர சபையினருக்கும் நன்றி தெரிவித்தார்.

திணைக்கள உதவி ஆணையாளர் திரு. வி. முருகையா பிரதேசக் கணக்காளர் திரு. டி. ரி. ஜோன் தேசிய சந்தைப் பொறுப்பதிகாரி திரு. க. கணேசலிங்கம் திரு. ஏ பத்மநாதன் ஆகியோரும் பேசினர்கள். [அ]

# அதிமுகவில் ஜெயலலிதா

சென்னை ஜன். 6

திரைப்பட நடிகை ஜெயலலிதா அண்ணா திமுகவில் சேர்ந்துள்ளார்.

இத்தகவலை அதிமுக பொதுச் செயலாளர் திரு. பா. உ. சண்முகம் தெரிவித்தார்.

நடிகை ஜெயலலிதா அநேக படங்களில் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனுடன் பிரதான பாத்திரத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# குடும்பநல ஆலோசனைக் கூட்டம்

(புலோலி)

இலங்கைக் குடும்பத்திட்டச் சங்க யாழ். மாவட்டச் செயற்குழு கிராம குடும்பநலத் திட்டத்திற்கமைய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தும்பளை கிராமத்தை மாதிரிக்கிராமமாகத் தெரிவு செய்ததையடுத்து தும்பளை கிராம சேவை அலுவலர் அலுவலகத்தில் தலைவர் திரு எம். ஏ. நடராசா தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது. [கு]

# படிவங்கள் தனிச்சிங்களத்தில்

[புங்குடுதீவு]

விற்பனை அபிவிருத்தித் திணைக்கள உதவிமுகாமையாளருக்கான விண்ணப்பம் தனிச்சிங்களத்தில் உள்ளது

தமிழ்பகுதி விற்பனை அபிவிருத்தித் திணைக்கள மக்கள் கடைகளுக்கு தனிச்சிங்களத்திலான படிவமே அனுப்பட்டுள்ளது (க)

# தர்மபுரம் தேவாலயத்தில் திருவிருந்து ஆராதனை

[அரியாலை]

''கிறிஸ்தவ சபைகள் ஆரம்பமாகிய முதலாம் நூற்றாண்டியே வயதுவந்தவர்கள் மட்டுமே ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்க்கப்பட்டார்கள். அன்றேஅவர்களுக்கு திருவிருந்தும் அளிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டார்கள்.'' என்று தர்மபுரம் பரிசுத்த லூக்கா தேவாலயத்தில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் திருவிருந்தாராதனையில் அருளுரை நிகழ்த்திய அருட்திரு இரத்தின நாயகம் அடிகளார் பேசுகையில் குறிப்பிட்டார்.

கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட்திரு சுவீதின் பெர்ணண்டோ ஆண்டகையல் ஒப்புக் கொடுக்கப்பட்ட திருநற் கருணை ஆராதனையில் அருட்திரு இரத்தின நாயம் அடிகளார் தொடர்ந்து அருளுரை நிகழ்த்துகையில்'அன்று கிராம மக்கள் கிராமத்தின் நடுவில் ஓடும் ஆற்றண்டையில் கூடித் தேவனைத் தொழுதார்கள், அப்பொழுது அன்றைய மதபீடத்தலைவரான பிஷப், அவர்களை ஒவ்வொருவராக ஆற்றில் இறக்கி அவர்கள் தலையின் மேல் கையை வைத்து பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பேரலே அவர்களை நீருனுள் மூன்று தரம் அமுக்கி ஞானஸ்நானம் கொடுப்பார். இதன் மூலம் அவர்களிடமிருந்த பழைய அதாம் நீங்கி புதிய ஜீவன் அவர்களுக்குத் தோன்ற வழிபிறந்தது. இதனை அன்று முழுக்கு ஞானஸ்நானம் என்று கூறினர்கள், இரண்டாம் நூற்றாண்டிலே பிறந்த பிள்ளைகளில் ஐம்பது வீதமானோர் பல காரணங்களினல் இறந்தார்கள் பிரசவத் தாய்மார்களும் இறந்தார்கள் இதனல் பிள்ளைகள் பிறந்த பொழுது அவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுத்து அவர்களையும் திருச்சபையில் சேர்த்துக் கொண்டார்கள், இதன் மூலமே குழந்தைகள் ஞானஸ்நானம் ஆரம்பமாகியது. இதன் மூலமே ஞானஸ்நானம் திருச்சபையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது' என்று குறிப்பிட்டார்.

ஆண்டகையால் ஒப்புக் கொடுக்கப்பட்ட திருவிருந்தாராதனையில் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டீ ஹோர்சிங்டன் அடிகளார் அருட்திரு ஐசக் செல்வரத்தினம் அடிகளார், அருட்திரு யே. சர்வானந்தன் அடிகளார், அருட்திரு சொலமன் அடிகளார் ஆகியோர் பங்கெடுத்தனர்.

யாழ்ப்பாணப்பகுதிகளிலிருந்து பெருந்தொகையானோர் இவ்வாராதனையில் பங்கெடுத்தனர்,

### மணிவாக்கு

மதங்கள் எல்லாம் ஒரே முடிவை அடையும் பல பாதைகள் தானே!

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## 'பட்டறி கெட்டறி'

**து**ன்பங்கள் மூலம் உலகத்தைக் கற்றுக்கொண்டவன், ஒரு ஞானியை விடச் சிறந்த மேதையாகி விடுகிறான். மோசமான அனுபவங்களே உண்மையான அறிவை உண்டாக்குகின்றன.

இது ஒருமணிவாக்குப் போல் தோன்றும்; சாதாரண வாழ்வில் நாம் காண முடியாத ஒரு ஆழமான உண்மையென்பதால் இதனை அலட்சியம் செய்ய இடமுண்டு

தொடர்ந்து துன்பங்கள் வந்து கொண்டே இருந்தால், அழுதற்குச்சக்தியில்லாமற்போய், வெறுப்பும் விரக்தியும் கலந்த சிரிப்பு வருவது இயல்பு. இந்த ஒரு நிலையை மக்கள் நாடுகின்றனர்.

உள்ளத்தில் ஒளியில்லாத தால வாக்கினில் ஒளி தென்படவில்லையென்று பாரதியாரின் நூற்றுண்டில் மக்கள் பரக்க முழிக்க வேண்டியிருக்கிறது.

இஸ்லாமிய, இந்து, பௌத்த மாநாடுகள் அகில உலக ரீதியில் நடந்து முடிந்துவிட்டன. பௌத்த மக்கள் பெரும்பான்மையினரான நாட்டில் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்.

ஆனல் புத்த பெருமானின் கோட்பாடுகளுக்கு இலங்கைதான் தலைமை நிலையமென்று அப்பெருமானின் போதனைகளை உலகில் பரப்புவதை முக்கிய பணியாகக் கருதும் தலைவர்கள் ஒருபுறம்; இலங்கையில் பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்க வேண்டுமென்று உருக்கொள்கின்றவர் இன்னொருபுறம். இவ்வித இயக்கத்தை நாம் அர்த்தமற்றதென்று அசட்டை செய்வது அபாயமாகும் படித்தவர்கள் சட்ட மேதைகள் இந்த இயக்கத்துக்கு தலைமை தாங்குகிறார்கள்.

'துக்கம்' என்பதற்கு என்ன காரணம், அதனை எவ்வாறு நீக்கலாமென்ற கருத்தே புத்தபிரானின் முக்கிய போதனை, அப்பெருமானின் நீண்டகால வாழ்வு இதற்கு விடையாகவிருக்கின்றது.

அத்தகைய சமயத்தின் அடிப்படை இலட்சியத்தில் தம்வாழ்வை அமைக்க வேண்டுமென்று கூறும் அறிவாளிகள் அதனை அரசாங்க மதமாக்க வேண்டுமென்று ஆவேசப்படுவது அம்மதத்தின் கோட்பாட்டுக்கு முரணானது மட்டுமல்ல; துன்பங்கள் மூலம் உலகத்தைக் கற்றுக்கொள்ளும் ஆற்றல் அற்றவர்களென்பதை உணர்த்துகிறது.

1956-ல் தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டுவந்த பிரதமர் பண்டாரநாயக்கா அரசியல் அதிகாரத்துக்காக எந்தச்சக்திகளைத் திருப்தி செய்ய முனைந்தாரோ அவற்றால் அவருக்கு அகால மறைவு ஏற்பட்டதை நினைவிற் கொள்ள வேண்டும். அதன் படிப்பினை வீண் போகலாகாது.

சிங்கள மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்றும், அந்த இனத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றும் எழுப்பப்படும் கோஷங்கள் ஐ. தே. க. ஆட்சிக்கெதிரான இயக்கத்தின் குரல் என்பதில் ஐயமில்லை. இதனைக்கருத்திற் கொண்டு அரசாங்கத் தலைவர்கள் 'பௌத்தத்தின் மேம்பாட்டை தொண்டைகிழிய கத்துகின்றனர். அது போதுமானதாகாது

ஆனல் இனத் துவேஷத்துக்கு இது தக்க மருந்தாகாது. இனத்துவேஷத்தின் தீங்கை மக்களுக்கெடுத்துரைப்பது அரசின் பாரிய பொறுப்பு அதன் விளைவைத் தடுப்பதும் அதன் அவசிய கடமை. அதனையே ஒரு ஆயுதாமக உபயோகித்த இருபெருங்கட்சிகள் தங்கள் ஆட்சிக்கு அது பலனளிக்குமென்றால் அதனைத் தூண்டிவிடத் தயங்காதது கடந்தகால வரலாறு பொது மக்கள் இதனை மறந்து விடமாட்டார்கள்.

மொழியிலும் மதத்திலும் தீவிரவாதம் தொடருமானல் நாட்டைப் பிடித்த 'சனியன்' அட்டமத்தில் நீண்ட காலம் நிற்குமென்று நம்பலாம்.

## புதுமைத் தெய்வம்

# வற்றுப்பளை அம்மன் பொங்கல் விழா இன்று

ஒரு பக்கம் நந்திக்கடல் அழகுசெய்யவும், வயல்களும் தோட்டங்களும் நீண்டு கிடக்கும் தென்னஞ்சோலைகளும் மறுபாகம் குவியவும், நடுவே அமைந்துள்ள திருக்கோவிலின் கண் அமர்ந்து அருள்பாலித்துவருகிறுள் வற்றுப்பளைக் கண்ணகி அம்பாள். துந்துபி வருடம் வைகாசி விசாகத்தன்று, திங்கட்கிழமை அம்பாளுக்குத் திருப்பொங்கற்தினம்.

கடல் நீரில் விளக்கெரியவும் அவ்வொளியில் அமர்ந்திருந்து தன்னைநாடி வரும் கோடி பக்தர்களுக்கு அருள் கொடுக்கும் அம்பாள் ஒரு புதுமைத் தெய்வம்.

நாடியவர்களுக்கு அச்சமில்லை. வணங்குபவர்களுக்குத் துன்பமில்லை. அம்பாளின் திருக்கண் ஒளி கிடைத்துவிட்டால் தீராத நோய்களும் தீர்ந்துவிடும். பாண்டியன் ஆண்ட மதுரையைத் தீமூட்டிவிட்டு இலங்கைக்கு வந்ததாகவும், காவலர்கள் துரத்த வற்றுப்பளைக்கு வந்ததாகவும் மாடுமேய்க்கும் இடையர்களைக் கண்டு 'பசிக்கிறது பொங்கல் பொங்கித் தாருங்கள்' எனக் கேட்கவும், இடையர்கள் பொங்கிக் கொடுக்க உண்டுவிட்டு, தலையில் பேன்பார்த்துவிடச் சொல்லி கேட்டாராம். அப்போது தலையைக்கோதிய இடையர்கள் தலையெல்லாம் கண்களாக இருக்கக்கண்டு அதிர்ச்சியடைய 'அம்பாள் அவர்களை ஆசிர்வதித்து 'நான்தான் ஆயிரம் கண்ணுடைய கண்ணகி' எனக்கோர் திருக்கோவில் இங்கே சமையுங்கள் எனக் கூறி மறைந்தனளாம்.

அவ்விடமே இப்போது வற்றுப்பளையாகி இருக்கிறது இலங்கை வெள்ளையர் ஆட்சி இருந்த சமயத்தில் ஓர் வெள்ளைத்துரை தனது படையுடன் வந்து கோவிலை அழிக்கமுனைந்தபோது பூசாரியார் தடுத்து 'இது புதுமையுடைய அம்பாள் தெய்வம்' எனக் கூறவும் எங்கே' உங்கள் புதுமையைக் காட்டுங்கள் என துரை கேட்டானும். அப்போது திருக்கிணற்றில் நீர் எடுத்து பனிச்சையில் எறிந்து வெள்ளிப்பிரம்பால் அடிக்க பனிச்சை ஆடி காய்களை எறிந்து துரையையும், படையையும் துரத்

(5-ம் பக்கம் பார்க்க)

## காக்கும் தெய்வம் கண்ணகி

நந்திக் கடற்கரை ஓரம்—வெய்யில் நேரம்
அன்னை தேவி ஏகினுள்
முல்லை ஊரை நாடினுள்—அங்கு
ஆயர் கண்ணில் தோன்றினுள்— (ந)

ஆயிரங்கண் ஒளியுடனே
அன்னையவள் காட்சி தந்தாள்
தாயவளும் தாக மென்றுள்
தன்பசியைத் தீருமென்றுள்
தண்ணீ ரெடுத்தே ஆயர்—அதை
உண்ணக் கொடுத்தார் அம்மை—எம்மை
காக்கும் தெய்வமே— (ந)

வெய்யில் தனிலே அமர்ந்த
வேப்பம் படவாள் தழைத்தே
தையல் திருக் கண்ணகிக்கு
தண்ணிழலைத் தந்ததுவே
வேப்ப மரத்தின் நிழல்—நிழல்
வீற்றிருந்தவள் அருள்—பெரும்
காவல் தெய்வமே— (ந)

ஆதவனும் தான் மறைந்தான்
மாது விளக் கேற்றுமென்றுள்
ஆயரிடம் நெய் இல்லையே
அம்மையிடம் தாமுரைத்தார்
தீபமதனில்—கடல்—உவர்
நீரை எடுத்தே இட—செய்தாள்
கற்பின் தெய்வமே— (ந)

பொங்கு கடல் நீர் விளக்கு
அங்கு ஒளி வீசிடவே
பொங்கல் பழம் பால் படைக்க
மங்கை திருவமுது செய்தாள்
ஆயர் தொழவே—இறை—அவள்
மாய மெனவே—மறைந்—தனள்
கற்பீன் தெய்வமே— (ந)

-சிவநேசன் வே. கந்தையா

# ஆங்கிலம்

ஆங்கிலப் படிப்பு அற்றுப்போனதாலே பருவகால மழை மட்டுமல்லாமல், பொதுவாக நாட்டின் சீதோட்சணம் நிலைகுலைந்திருக்கிறது என்று நம்புபவர்கள் இந்நாட்டில் இன்றும் செல்வாக்குடன் வாழ்கின்றனர்.

இதன் போலித்தன்மையை விரிக்கவேண்டியதில்லை; ஆனல் அவர்களின் கருத்தை வரவேற்று அதில் மயங்கி நடப்பவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கும் வருங் காலத்துக்கும் முட்டுக்கட்டையாக விருக்கிறார்கள் என்பது பலருக்கு இலகுவில் புலப்படுவதில்லை செல்வந்தர்மட்டத்தில் என்றும் வாழவிரும்பும் அறிவிலிகளின் ஆழமற்ற நோக்கு இது.

ஆங்கிலத்தின் அவசியம் எமக்குபுரியாத புதிரல்ல; பட்டப் படிப்புக்கு, எந்த நிலையிலும் போதிய ஆங்கில அறிவு அவசியமென்பதை 'தனித்தமிழ்இயக்க' வல்லுநரும் இன்று ஓரளவுக்கு ஒப்புக்கொள்வார்கள்.

ஜனதிபதி ஜயவர்த்தன இவ்விடயத்தில் வேண்டிய ஊக்கம் அளிப்பதும், அவருடைய உயர் கல்வி அமைச்சு இன்று ஆரம்பித்திருக்கும் விசேட ஆங்கில பயிற்சியும் இதற்குச் சான்று பகர்கின்றன.

புத்தம் புதிய நூல்கள், செயல்முறை திட்டங்கள், ஆசிய நிறுவனத்தின் தாராளமான உதவி, பிரிட்டிஷ்கவுன்சிலின் ஆராய்ச்சி நூல்கள் கற்பிக்கும் முறைகள், இவையெல்லாம், பட்டதாரி மாணவர்களுக்குப் போதிய ஆங்கிலப் பயிற்சி அறிவு உதவவல்ல அம்சங்கள்.

பெரிய நோய்களுக்கு என்ன நவீனமருந்து உண்டு என்று அறியும் ஆவல் வளர்ச்சியடையும் விஞ்ஞான உலகில் இயல்பானது, அவசியமுங்கூட; ஆனல் சில பழமையான பரம்பரை வைத்தியமுறையும் சில வேளைகளில் வாய்ப்பாயிருக்குமென்பதை இக்காலத்தில் நாம் நினைக்கமுடியவில்லை.

போக்லந்தீவுகளில் போர் புரியும் சாதாரண போர் வீரன் ஒருவன் தன்னுடைய பக்க பாக்கெட்டுக்களில் (Sidepockets) ஒன்றில் பைபிள், மற்றதில் ஷேக்ஸ்பியர் வைத்துக்கொண்டு ஓய்வுநேரங்களில் அவற்றை வாசித்துஇரசிக்கிறனென்று செய்தி கூறுகிறது.

இவ்விரண்டு நூல்களை விட ஆங்கிலத்தை உருசிப்படுத்தவேறுநூல்கள் இல்லை என்றகருத்து ஒருபண்டைய கருத்து, காலவெள்ளத்தால் அழியாதகருத்து. அவ்வீரு நூல்களைச் செவ்வனே அவ்வாலிபன் கற்றிருந்தால் இந்த அநியாய யுத்தத்தில் பங்கு பற்றியிருக்கமாட்டான்.

நிற்க, நாம் குறிப்பிடும் கருத்து தமிழைப்போல் ஆங்கிலம் ஒரு விருத்தியடைந்த மொழி, அதனைக் கற்றுப்பயனடைய, இவ்விரண்டு நூல்களும் எவருக்கும் இன்றியமையாதன, மனித வாழ்வை வளம் படுத்தவல்ல நூல்கள் அவற்றின் இலக்கியச்சுவையால் அவை அம்மொழிக்கு அசாதாரண புலமையை ஊட்டுகின்றன

இதனை நாம் ஏற்றுக் கொண்டால் எங்கள் மாணவர்களுக்கு எதிர்பாராத நலம்.

## கலாக்ஷேத்திரப்பாணியிலான

# கவின்மிகு பரதம்

பிரபல தமிழ்க்கலைஞர்கள் இலங்கைக்கு வந்து ரசிகர்களுக்குக் கவின்கலைவிருந்தளித்துச்செல்லுவது இப்பொழுது வழக்கமாகிவிட்டபோதிலும் அவர்களிற் பலர் யாழ்ப்பாணத்திற்கு வருவது அருமை. இந்நிலையில் பிரபல கலைஞர் ஒருவர் கொழும்பு, திருகோணமலை முதலிய இடங்களிற்குச் சென்று நடனவிருந்தளித்த பின்னர் யாழ். நகருக்கும் வந்து கலைவிருந்தளித்துச் சென்றுள்ளார். தமிழ்நாடு கலாஷேத்திரத்தில் பயின்று தேர்ச்சிபெற்றுப்பின் அக்கலைக்கோயிலேயே சிரேஷ்ட பரதநாட்டிய ஆசிரியையாகக் கடமையாற்றிவரும் நிருத்ய சூடாமணி திருமதி கிருஷ்ணவேணி லஷ்மன் தான் இக்கலைஞர். இவருடைய சிறப்புமிகு பரதநாட்டிய நிகழ்ச்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு, யாழ்ப்பணப் பல்கலைக்கழகக் கவின்கலைமன்றம் ஆகியனவற்றின் ஆதரவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இவரது நாட்டிய நிகழ்ச்சி நிரலில் விநாயகஸ் துதி தொடக்கம் மங்களம்வரையிலான பதினெரு அம்சங்கள் இடம்பெற்றன.

இரண்டு மணித்தியாலங்கள்வரை நடைபெற்ற இந் நடனநிகழ்ச்சியை கிருஷ்ணவேணி, நேர்த்தியாகவும். அதிலாவண்யமாகவும். விரைவான அசைவுகளுடன் திறம்படச் செய்தார். அபிநயங்களும் நளினங்களும் நடனத்தை நன்கு பொலிவுறச் செய்தன. பாவரஸங்கள் நேர்த்தியாக மிளிர்ந்தன. நாட்டியசாஸ்திரமரபினைத் தூய்மையாக நன்குபேணிவளர்க்கும் கவின்மிகு கலைக்கோயிலான கலாஷேத்திரபாணியிலான இந் நடனநிகழ்ச்சியில்பாரம்பரியக கலையிலே காணக்கூடிய பழம் பெருமையும், புதுமெருகும், வனப்பும் ஒன்றிணைந்து மிளிர்ந்தன.

நடனத்திற்குக் கலாஷேத்திரக் கலைஞரான ஸ்ரீசீதாராமசர்மா நட்டுவாங்கம் செய்து வாய்ப்பாட்டிசைத்தார் திரு. கே. ஆர். கோபிநாத் மிருதங்

[5-ம் பக்கம் பார்க்க]

## "19ம் நூற்றுண்டின் நடுப்பகுதி

# உலக நாடுகளின் உத்வேக காலமாக விளங்கியது"

(யாழ்ப்பாணம்)

"19-ம் நூற்றுண்டின் நடுப் பகுதி உலகநாடுகள் பெரும் பாலான வற்றின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் முப்பெரும் உரிமைக் குரல்களின் உச்சஉத்வேக காலமாகும். குறிப்பாக பிரித்தானிய ஏகாதிபத்திய சாம்ராச்சிய ஆட்சிமுறைக்கு எதிராக உத்வேகம் பல்வகை உருவங்களில் தொழிற்பட்ட காலம்."

இவ்வாறு அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அதிபர் திரு. மூ. திருநீலகண்டசிவம் மகா வித்தியாலயத்தின் சிரேஷ்ட மாணவமன்றத்திரால் நடாத் தப்பட்ட தேசிய வீரர் தின வைபவத்தில் உரையாற்று கையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எமது அனுசமுறைகள் பெருமளவிற்கு சாத்திய பூர்வமானதற்கு முக்கிய காரணம் எமது நாட்டுத் தலைவர் களின் தலைமைத்துவமே.

இத்தகைய நம்நாட்டு தலைமைப்பீடத்தின் முதன்மையான அணிகலன்களாக விளங்கியவர்கள் தேசபிதா டி.எஸ். சேனநாயக்காவும், சேர். பொன். இராமநாதனும் என்றூர்.

வித்தியாலயமாணவமன்றத் தலைவர் செல்வன் இ. செல்வ ராசா தமது தலைமை உரையில் "நம் மூதாதையர்நமக்காகச் செய்த தியகங்களை அறிவதன் மூலம் நாமும் நாட்டின் நலனுக்ாககாப் பாடுபடும் சிந்தையைப் பெறவாய்ப்பேற்படும் என்று கூறினர்.

உப அதிபர் திரு. ச. அம்மையப்பர் பேசுகையில் கூறியதாவது: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எமது தேசிய வீரர்களில் முன்னிலையில் வைத்து போற்றப்பட வேண்டியவர். தமிழ் மக்களின் சமய கலாசார மறுமலர்ச்சிக்குஈழத்தில்வித்திட்ட பெரியாராகிய இவர் தென்னிலங்கையில் சிங்களபௌத்த மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றுவதற்கு வழிகாட்டியாய் விளங்கினர்.

நாவலர் எமது தேசியகலாச்சார சூழலிலே மாணவர்கள் உயர்கல்வி வரை கற்பதற்கு ஏற்ற கல்லூரிகள், கலாசாலைகள் நாடுமுழுவதும் ஏற்படுத் தப்படுவதற்கு வித்திட்டவரா வர்" என்றூர்.

திரு. செ. இரத்தினதுரை உரையாற்றுகையில் "சேர் பொன் இராமநாதன் கல்வித் துறையிலும் அரசியலிலும் நாட்டிற்கு ஆற்றிய சேவை மகத்தானது. இனங்களுக் கிடையே ஒற்றுமைஉணர்வின் பொற்காலமாக இராமநாதன் காலத்தைக் கூறலாம. கல்வித் துறையில் அவர்கண்ட தீர்க்க தரிசனம் இன்றும் பலனைத்தந் துள்ளது. அவர் அன்று நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரி இன்று யாழ். பல்கலைக்கழக மாக விளங்குகிறது" என்றூர். (கு)

## காலக்ஷேத்திரப்....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கூழும், திரு. ஏ. உன்னிகிருஷ்ணன்புல்லாங்குழலும், இராமநாதன் நுண்கலைப் பிரிவு வயலினிசை ஆசிரியை செல்வி தனதேவி சுப்பையா வயலி னும் வாசித்தனர். வாய்ப் பாட்டிசை, வாத்திய இசை, நடனம் ஆகியன முதலியவை நன்கு இணைந்து சோபித்தன.

கலாஷேத்திரப்பணியாலான பரதம் இலங்கைக்குப் புதிய தன்று. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இராமநாதன் நுண்கலைப் பிரிவில் பயிலப்பட்டுவரும் பரதம் கலாஷேத்திரப்பாணியிலாகும் என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வகையிலே இங்கும் ஒரு கலாஷேத்திரம் உருவாகிவருகிறது என்று கூறலாம். கிருஷ்ணவேணிபோன் ரேரின் தொடர்புகளும் இக் கலாச்சாரத் தொடர்பினை மேலும் வலுப்படுத்துவதோடு வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகின்றன. ஈராண்டு களுக்குமுன்னர் கலாக்ஷேத் திரக்குழுவினர் யாழ்ப்பாணத் திலே நிகழ்த்திய "கண்ணப் பர்" நாட்டிய நாடகத்திலும் கிருஷ்ணவேணி முக்கியமான பங்கு கொண்டிருந்தார் என் பது நினைவு கூரற்பாலது.

வி. எஸ்.

T. V. ஏரியல் அமைப்பில்

முதன்மைமிக்க ஸ்தாபனம்

சென்னை, ரூபவாஹினி நிகழ்ச்சிகளை

T V யில் சிரமமின்றி பார்க்க

உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.

நொடிப்பொழுதில், TV ஏரியல்

கோளாறுகளை சரி செய்யலாம்.

எமது பராமரிப்பு சேவை

24 மணி நேரம் செயல்படுகின்றது

சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்

எடுப்பதற்கு

குறைந்த கட்டணம்

பல்வேறு TV செட்டுகளை

பிஞன்ஸ் வசதியுடன் பெறலாம்.

வீனஸ்

றெக்கோடிங்

றேடியோ வாச் வேக்ஸ்

ஸ்ரீதர் தியேட்டர் முன்,

யாழ்ப்பாணம்.

## கூட்டுறவு பயிற்சி

[வவுனியா]

கூட்டுறவுச் சங்க பணியாளரிடமும் தனிப்பட்ட மாணவர் களிடமும் இலங்கைத் தேசிய கூட்டுறவு சபை கூட்டுறவு ஊழியருக்கான சாதாரண பயிற்சிக்கான விண்ணப்பங் களை கோரியுள்ளது.

வவுனியா கூட்டுறவுப்பயிற்சி நிலையத்தில் ஐந்துமாத கால கூட்டுறவுப் பயிற்சி நடை பெறும்.

பயிற்சிபெற விரும்பும் கூட் டுறவுச்சங்க பணியாளர்களும், தனிப்பட்ட மாணவர்களும் வவுனியா கூட்டுறவுத் தலைமைக்காரியலயத்தில் விண்ணப் பப்படிவத்தை பெற்றுக்கொள் ளலாமெனவும் விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 27ம் திகதி என அறிவிக்கப்பட் டுள்ளது [கு]

## பெண்களுக்கான நீச்சல் பயிற்சி

[வேலணை]

வேலணை வெள்ளைக்கடற் கரையில் இளம் பெண்களுக் கான 2வது முறையான நீச் சல் பயிற்சி வகுப்பு நடைபெற் றது.

இந்த நீச்சல்பயிற்சி வகுப் பில் பங்குபற்றுவதற்காக ஏற் கனவே, வேலணை, ஊர்காவற் றுறை, நல்லூர், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இளம் பெண்கள் ஏராளமானோர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்,

விளையாட்டுத்துறை அமைச் சின் ஆதரவுடன் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புக்கான ஏற் பாடுகளை யாழ். கச்சேரி விளை யாட்டுத்துறை அதிகாரி திரு. எஸ். மரியதாஸ் செய்திருந் தார்.

விளையாட்டுத்துறை அமைச் சின் தேசிய நீச்சல் பயிற்சியா ளர் திரு. சி. பி. ராஜகருணு நீச்சல்முறைகளை பயிற்சிமூலம் விளக்கினர்.

## 'கீற்று' சஞ்சிகை விமர்சனக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

'கீற்று' இலக்கிய சஞ்சிகை யின் விமர்சனக் கூட்டம், எதிர்வரும் சனிக்கிழமை மாலை யாழ். நகரில் நடைபெறவுள் ளது.

ஆஸ்பத்திரி வீதி தனியார் கல்வி நிறுவனத்தில் நடை பெறவுள்ள இக்கூட்டத்தில் இதுவரை வெளிவந்த 'கீற்று' இதழகள் விமர்சிக்கப்படும்.

திரு. முல்லையூரான் தலைமை யில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் திருவாளர்கள் க. சிவதாசன், காவலூர் எஸ். ஜெகநாதன், வி. ரி. இளங் கோவன், எஸ். திருநாவுக் கரசு ஆகியோர் உரையாற்று வார்கள். கீற்றின் இணையாசி யர்கள் ஆர். எஸ். லோகேந் திரலிங்கம், கல்லூரன் ஆகி யோர் பதிலுரையாற்றுவார் கள்.

## வற்றுப்பளை. ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தியதாக செவிவழி வரலாறு கூறுகிறது.

அப்பனிச்சை நின்ற இடத் தில்தான் இப்போது கண்ணகி யின் வரலாறு கூறும் சிற்பக் கூடம்' அமைக்கப்பட்டிருக் கிறது.

பொங்கல் தினத்தன்று அம் பாளின் வரலாறு பாடப்படும். திருப்பொங்கல் இடம்பெறும் பொங்கற்பானையில், சுற்றி யுள்ள நூலிழை எரியாமலும் பானைவாயில் கட்டப்பெறும் வெற்றிலை வாடாமலிருக்கவும் பொங்கல் பொங்கி முடியும் எனப்படுகிறது. இத்தகைய சிறப்புகளும், பெருமையும் வாய்ந்த அம்பாளின் திருப் பொங்கல்—திங்கட்கிழமை

காவடிகள், பாற்செம்புகள், பஜனைகள், தூக்குக் காவடிகள் தீக்குளிப்புகள் இடம்பெறு வதைக்கண்டால் ஒரே பக்தி மயமாக இருக்கும். வற்றுப் பளை அம்பாள் ஆலயம் ஆண் டுக்காண்டு புதுப்பிக்கப்பட்டு, புதுமெருகு பெறுகிறது.

-முல்லையூரான்

# திட்டமிட்டபடி தேர்தலை விடுதலை அணி பகிஷ்கரிக்கும்

(யாழ்ப்பாணம்)

முன்புதிட்டமிட்டபடி தேர் தல் பகிஷ்கரிப்பை தமிழீழ விடுதலை அணி நடாத்தியே தீரும். எந்தவித காரணம் கொண்டும் இதைக்கைவிட மாட்டோம்" என்று திரு. கோவை மகேசன் குறிப்பிட் டார்.

நல்லூர் கல்யாணமண்டபத் தில் நடைபெற்ற சிவகுமாரன் நினைவுதினக் கூட்டத்தில் தில் கலந்துகொண்டுபேசுகை யில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் எஸ். தர்ம லிங்கம் தலைமையில் இந்த நினைவுதினக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற் றது.

திரு. கோவை மகேசன் தொடர்ந்துபேசுகையில்கூறிய தாவது:

"சிவகுமாரன் நினைவுதினக் கூட்டத்தை உரும்பராயி லுள்ள அவரது சிலை அடியில் நடத்துவதற்கு, உரும்பராய் உப அலுவலத்திடம் அனுமதி கோரியிருந்தோம். ஆனல் தமிழர் விடுதலைக் கூட்டணியி னர் சிவகுமாரன் நினைவுதினக் கூட்டம் அந்த இடத்தில் நடாத்துவதற்கு அனுமதி பெற்றுவிட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. சிவகுமாரனுக்கு இரு இடங்களில் அஞ்சலிக் கூட்டம் நடக்கட்டும் என்று நாங்களும் சந்தோஷப்பட் டோம் ஆனல் அவர்கள் நடாத்தினுர்களா?

லிபியா அதிபர் கேணல் கடாபி, பாலஸ்தீனவிடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அர பாத் ஆகியோரை வரவேற் கும் இலங்கை அரசாங்கம், அவர்களைப்போல் நாங்களும் இருக்க ஒரு நாடு வேண்டும் என்று கேட்டால் பயங்கர வாதிகள் என்று சொல்லிக் கொலைசெய்கிறுர்கள், சித்திர வதை செய்கிறுர்கள்; உடமை களை அழிக்கிறுர்கள்.

"சிவகுமாரன் உண்மை யான ஒரு விடுதலைவீரன், தமிழாரய்ச்சி மகாநாட்டில் நடந்த துயரச்சம்பவவங்களின் போது சிவகுமாரன் செய்த தொண்டு மகத்தானது. அன்றிலிருந்துதான் அவன் உள்ளத்தில் விடுதலைத்தீ கொழுந்து விட்டடெரிந்தது"

திருவாளர்கள் ஈழவேந்தன், செந்தூர்ராசா ஆகியோரும் உரைநிகழ்த்தினர். [மா]

## "மாணவர்கள்

# ஆசிரியர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும்"

[யாழ்ப்பாணம்)

"மாணவர்கள், ஆசிரியர் களுக்குப் பணிந்து நடக்க வேண்டும். பாடசாலைப்பரு வத்திலே நல்ல பழக்கவழக் கங்களைக் கற்றுக்கொள்ள மாணவர்கள் தவறுவார்களே யானல் எதிர்காலத்தில் மிக வும் கஷ்டமான சூழ்நிலைக்கு ஆளாக வேண்டியேற்படும்"

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரன் தெல் லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலய வருடாந்த் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகச் கலந்து கொண்டு பேசுகையில் கூறி ஞர்.

மகாவித்தியாலய அதிபர் திரு சி. சிவநாதபிள்ளை உப அதிபர் திரு கே. வைத்திலிங் கம் ஆகியோர் மங்கள விளக் கேற்றி வைக்க வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா பாடசாலை யின் புதிய விளையாட்டு மைதானத்தை திறந்து வைத் தார்.

பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பை ஏற்றுக்கொ ண்ட திரு. இராஜேந்திரன், பாடசாலைச் கொடியையும் ஏற்றிவைத்தார். மகாவித்தி யாலய அதிபர் திரு. சிவ வேலாயுதபிள்ளை தலைமை உரை நிகழ்த்தினர்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரி சில்களை திருமதி இராஜேந்தி ரன வழங்கினர். (மா]

## ரூ.85,000 ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்று காணுமால்போன காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களைச் சேர்ந் ஐந்து கடற்றெழிலாளர்களின் குடுப்பங்களுக்கு ஜனதிபதி நிதியிலிருந்து 85 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை பாதிக்கப் கட்ட குடும்பங்களுக்கு உத்தி யோகபூர்வமாக யைளிக்கும் வைபவம் ஒன்றை விரைவில் நடாத்துவதற்கான ஒழுங்கு களை ஊர்காவற்றுறை உதவி அரராங்க அதிபர் திரு. சி. பால ரத்தினம் வட்டுக்கோட்டைத் தொகுதிகடற்றெழில்ஆலோச கர் திரு. க. வீரகத்திப்பிள்ளை ஆகியோர் மேற்கொண்டுள்ள னர்.

## ரூபா 100 கள்ளநோட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிக்கிளையில் வைப்பிலிடவந்த ஒருவரின் 29,500 ரூபாவில் 100 ரூபா கள்ள நோட்டொன்று இருக் கக் கண்கபிடிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர், யாழ். வங்கி யில் வைப்பிட கடந்த வெள் ளிக்கிழமை மேற்குறிப்பிட்ட பணத்தை கொண்டுவந்தா ராம்.

இந் நோட்டுக்களை வங்கி அதிகாரிகள் பரிசீலனை செய் யும்போது 100 ரூபா கள்ள நோட்டிருக்கக் கண்டுபிடிச்கப் பட்டது.

யாழ், விஷேச குற்றத்தடுப்பு புலனய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (மா)

## சின்னக்கடை அடிக்கல் நாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

சின்னக்கடை பொதுச் சந் தைக் கட்டிடத்துக்கான அத்தி பாரக்கல்லை இன்று மாலை யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் வைபவ ரீதி யாக நாட்டிவைப்பார்.

இவ் வடிக்கல் நாட்டு விழா வில் யாழ். மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் மாநகர ஆணையாளர் திரு. சீ. வி, கே. சிவஞானம், யாழ். மாநகர உறுப்பினர்கள் உரை யாற்றவுள்ளனர். (மா)

# பூப்பந்தாட்டத்தில் யாழ். பல்கலைக்கழகம் வெற்றி

(அரியாலை)

பல்கலைக்கழகங்களுக்கிடை யிலான மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் யாழ். பல்கலைக்கழக கோஷ்டிகள் வெற்று பெற்றுள்ளன.

செல்வி ஆர் போல் தலைமையிலான கோஷ்டி மேசைப்பந்தாட்டப் போட்டியில் ஓம் முறை சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளது. இக் கோஷ்டியில் செல்விகள் அ. வராயினி, நா. தேவரஞ்சிதம் க. காஞ்சனு ஆகியோர் அங்கம் வகித்ததுடன் தம்முடன் எதிர்த்துப் போட்டியிட்ட ஏனையபல்கலைக்கழகங்களை வென்று ஜி.டி.டி. பெரேரா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தைத்தனதாக்கிக் கொண்டது.

செல்வி என் சிறீசலாவைத் தலைவியாகக் கொண்ட பூப்பந்தாட்டக் கோஷ்டி செல்விகள் ச. காஞ்சனு, எஸ் நல்லையா, வை. மிகுலா ஆகியோரின் திறமைய ன விளையாட்டின் மூலம் இவ்வருடம் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான சுற்றிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது

யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட பெண்களுக்கான ஹொக்கிப்போட்டியில் யாழ் பல்கலைக்கழகக் கோஷ்டி இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. செல்வி நா தேவரஞ்சிதத்தின் தலைமையிலான இக்கோஷ்டியில் செல்விகள் வி. லெம்பேட், எம். ஆர். சந்தியாப்பிள்ளை, எஸ். நல்லையா, கே. சபாநாயகம், ஜே சுப்பிரமணியம், கே சரோஜினி, எஸ். செல்லத்துரை பி.செல்வதி,எம்.ஏ.எம் றேஸ்பிலோமினு, வி.ராதா, எம். செபமாலை, ஜீ. கருணுகரி ரி. ஜெயந்தி, கே. பசுபதி ஆகியோர் அங்கம் வகித்தனர் போட்டியில் செல்வி சிவவாணி நல்லையா சுற்றுப் போட்டியில் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை

# கல்விவள நிலையத்துக்கு கனடியதூதரகம் அன்பளிப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத்தொகுதி கல்வி வள நிலையத்திற்கு கனடிய தூதரகம் வழங்கியுள்ள 35 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் இம் மாதம் 9ம் திகதி மேற்படி தூதரகத்திடமிருந்து கையேற்கப்படஉள்ளன.

காங்கேசன்துறைத் தொகுதி மாணவர்களது கல்விவிருத்திக்கு உதவு முகமாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இயங்கிவரும் மேற்படி கல்வி வள நிலையத்தில், பல்வேறு கல்வி வசதிகளையும் அதிகரித்து மாணவர்களுக்கு உதவ காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் நடவடிக்கை எடுத்திருந்தார். இந் நிலையத்திற்கு வேண்டிய பல்வேறு உதவிகளையும் அவர் சகல தூதரங்களிடமும் கோரியிருந்தார்.

அண்மையில் அமெரிக்க தூதரகம் பெறுமதிவாய்ந்த புத்தகங்களை இந்நிலையத்திற்கு வழங்கியிருந்தது.

தற்போது கனடிய தூதரகம் 35 ஆயிரம் ரூபா பெறுதியான படம்காட்டும் கருவி, 'சிலேட்' காட்டும் கருவி, ஆங்கில தட்டச்சு ஆகியவற்றை மேற்டி நிலையத்திற்கு வழங்க முன்வந்துள்ளது. [மா]


## தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

**த பினன்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு!
**விற்பனை முகாமையாளர்,**

# த பினன்ஸ் கம்பனி லிமிட்.

**249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.**

**போன்: 7680**


## கலையுலகின் இழப்பு



கலைத்துறைக்கு முக்கியமாக நல்லைநகர் நாடகமன்றத்தின் மூலம் புதுமெருகூட்டிய யாழ் வேந்தன் திரு. வ. சு. பாலசிங்கம் மறைந்து ஓராண்டுகள் ஓடிவிட்டன. ஆனல் அன்னர் கலைத்துறைக்கு ஆற்றத்துடித்த சேவையின் துடிப்பும் தமிழ் மக்கள் வாழ்வில் காட்டிய அக்கறையும் காலத்தை வென்று அவரை நம்மிடை வாழவைத்துக் கொண்டேயிருக்கிறது.

கிண்ணியாப் பகுதியில் மலேரியாத் தடுப்பு இயக்க வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றிய போது நல்லூர் கலைஞர்களின் படைப்புக்களை கிண்ணியாவில் மேடையேற்றி அங்கு கலையார்வத்தை தூண்டி விட்டார்.

தமிழ்க்காங்கிரஸ் வாதியாக மக்கள் தொண்டாற்றிடத் தொடங்கி பின்னர் தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சியில் இணைந்து ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தில் தோளோடுதோள் கொடுத்து அறப்போராட்டங்களில் அத்தனையிலும் தன்னை ஈடுபடுத்திய தன்னலம் கருதா பேராளர் இவர்.

கனகராயன்குளத்தில் குளிக்கச் சொன்ற இடத்தில் எதிர்பாராதவிதமாக மரண மடைந்த இவரின் பிரிவு இவரது மனைவி மக்களை மட்டுமல்ல கலை உலகிற்கும் இவரதுதொழிலாளர்க்கும் கூட மீளாத்துயராக இன்றுவரை தொடர்கிறது.

- ரி. அருள்ராஜ்,

## திருக்குறள் போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி வட்டாரக் கல்வி அதிகாரி பிரிவு பாடசாலைகளுக்கிடையே கடந்த வாரம் வேலணையில் நடந்த திருக்குறள் மனனப் போட்டியின் மேற்பிரிவில் மண்டைதீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் ந. விஜயசுந்தரம் முதலிடத்தை பெற்ருர்.

இவ்வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் கா. சுகேந்திரன் திருக்குறள் பேச்சுப்போட்டியில் மூன்ரும் இடத்தையும், மத்திய பிரிவு மாணவி செல்வி எஸ். சுபாசினி பேச்சுப்போட்டி மத்திய பிரிவில் 3-ம் இடத்தையும், செல்வி க. ராதிகா, மனனப்போட்டி கீழ்ப்பிரிவில் 3-ம் இடத்தையும் பெற்றனர். (வண்-நிரு)

## ஓய்வு பெறுகிருர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் பலவருடகாலம் ஆசிரியராக கடமையாற்றிய திருமதி பவானி சிவநாதன் தனது அறுபதாவது வயதில் ஆசிரியசேவையிலிருந்து ஓய்வு பெறுகிருர்.

தனது 27வருடகால ஆசிரிய சேவைமுடித்த இவர் இம் மாதம் முதல்சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ருர்.

பருத்தித்துறையில்

# திறந்தவெளி அரங்கு விரைவில் அமைக்கப்படும்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபையில் வெள்ளிவிழாக் கண்ட தலைவர் அமரர் நடராசா ஞாபகார்த்தமாகப் பருத்தித்துறையில் 75,000 செலவில் அன்னரது பெயரில் திறந்த வெளியரங்கு அமைக்கப்படவுள்ளது இதற்குகான நிதி ருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இத்திறந்தவெளியரங்கை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

பருத்தித்துறைப் பட்டின சபை ஆரம்பமான காலத்திலிருந்து முப்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக சபையின் அங்கத்தவராகவும், 27 ஆண்டுகள் பருத்தித்துறைப்பட்டினசபை, நகரசபைகளின் தலைவராகவுமிருந்து பருத்தித்துறை மக்களுக்கு அரும்பெரும் சேவைகளையாற்றிய அமரர் ந. நடராசாவின் ஞாபகார்த்தமாக திறந்தவெளியரங்கொன்றை அமைக்க வேண்டுமென பருத்தித்துறைப்பகுதி மக்கள் எம்; பி. திரு. கே. துரைரத்தினத்திடம் கோரிக்கைவிடுத்திருந்தனர்.

இப்பகுதி மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து எம். பி, திரு. துரைரத்தினம் கடந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து நடராசா திறந்த வெளியரங்கை அமைப்பதற்காக 35,000 ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார். ஆனல் அந்நிதி போதாமையால் எம். பி. மீண்டும் இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டலிருந்துமேலும் 40,000 ரூபாவை இத்திறந்த வெளியரங்கை அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்திருந்தார். நடராசா திறந்தவெளிக் அமைப்பதற்கான நடவடிக்கைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கட்படுமென எம். பி நமது நிருபரிடம் தெரிவித்தார். [அ]

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 24ம் திகதி
திங்கட்கிழமை
(7—6—82)

மேடம்: பொருமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள், அமைதி நன்று.

இடபம்: இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும், காதலர்கள் வாழ்வில் தடைகள் விலகும், பெற்ருேர் ஆதரவு உண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்: பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவும், திருடர் பயத்துக்கு இடமுண்டு, இனிக்கப் பேசுபவர்களை நம்ப வேண்டாம், துயர்படிந்த நாள்

கடகம்: ஒளிமயமானநாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் செலுத்துவீர்கள், உங்கள் உற்சாகத்தில் பெற்ருேரும் துணை நிற்பர், விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு.

சிங்கம்: உத்தியோக உயர்வுக்கும், உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்த நாள், கவர்ச்சிகரமான பொருள்களை வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

கன்னி: முயற்சியால் உயர்ச்சியுண்டு, பணவிவகாரங்களில் நல்ல திருப்பங்கள் காணப்படும், வெளியிடத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும்.

துலாம்: அதிக ஆசையினுல் அவஸ்தைப்படுவீர்கள், சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம், சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும்.

விருச்சிகம்: துன்பத்தின் ரேகைகள் படரும், எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள், கொடுக்கல் வாங்கல்மூலம் ஏமாற்றமடைய நேரிடும், தொழில்துறையில் தொல்லைகள் மறையும்.

தனு: உறவினர் வருகை மகிழ்ச்சி தரும், செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும், எதிர்பாராத காரியம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

மகரம்: நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும், கருத்து வேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும், இவற்றுக்கெல்லாம் பொறுமை வேண்டும்.

கும்பம்: சிறப்பான சம்பவங்கள் இடம் பெறும், சீருடன் வாழ்வீர், பெரிய இடத்துச் சினேகம் அனுகூலம் கொண்டுவரும், செல்வாக்குப் பெருகும்.

மீனம்: நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும், அதிர்ஷ்டம் உங்கள்பக்கம்.

**சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை**

## தலைவர் ராஜினமா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு-நயினதீவுப.நோ. கூ. சங்கத்தின் தலைவர் திரு. ஏ. பசுபதி தமது தலைவர் பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

## அனுதாபச் செய்தி

(வவனியா)

அண்மையில் காலமான அமரர் டாக்டர் அரசபிள்ளை நடராசாவின் அகால மரணத்தையிட்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வவுனியா கிளை அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளது. (கு)

## திருவாதவூரர் நூல் வெளியீடு

[சுழிபுரம்]

மாணிக்கவாசகர் குருபூசைத் தினத்தன்று திருவாதவூரர் புராண நூல் பொழிப்புரையுடன் வெளியிடப்படவுள்ளது. ஆசிரியர் சி. மருதபிள்ளை மொழிப்புரை எழுதியுள்ளார். நூல் யெளியீட்டுரையை வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபைத் தலைவர் திரு. க. வாமதேவன் எழுதியுள்ளார். நூல் அணிந்துரைரையை முதலியார் செ. சின்னத்தம்பி எழுதியுளார். [கு]

வெஸ்லி
மாவிப்பாய்
தினசரி 6-15, 9-15
ஆயிரம் ஜென்மங்கள்

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
தங்கைக்காக
(புதிய பிரதி)


# பழனி அப்பன் செட்டியார் சொத்துப்பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி

(கொழும்பு)

கலவான எம்.பியும், கம்யூனிஸ்ட் உறுப்பினருமான திரு சரத்முத்தெட்டுவேகம நாளை பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரட்ணவிடம் கீழ்க்கண்ட வாய்மூல வினவைக்கேட்கவுள்ளார்.

பலாங்கொடை நகரிலும் இதனைச் சூழவுள்ள பகுதிபிலும் உரிமையாளரில்லாதனவும், அரசாங்கத்திற்குச் சேர வேண்டியனவுமான பெருமளவு சொத்துக்கள் உண்டென்பதபற்றியும் இவற்றின் மூல உரிமையாளரான திரு. பி. எல். என். பழனி அப்பன் செட்டியார் 1 56 ஆம் ஆண்டில் இந்தியாவில் இறந்து போனது பற்றியும் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா? இச் சொத்துக்கள் தொடர்பாக 1957 ம் ஆண்டில் ஆதன வழக்கைச் தொடர்ந்த பொய்யான உரிமையாளரான திரு.பி. எல். நாகப்பன் என்பவருக்கு இச் சொத்தின் சட்டப்படியான உரிமை வழங்கப்பட்டுள்ளதா? திரு பி.எல். நாகப்பனுக்கு சொத்துக்களின் சட்டப்படியான உரிமையை வழங்குவதற்குமுன் 1968-12-6 ம் திகதி 8633ம் இலக்கத்தைக் கொண்ட சட்ட அதிகாரத்தின்மூலம் குறித்த சொத்துக்களை கையாள்வதற்கு திரு. எம். செல்லத்துரை என்பவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா? இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளாமல் இந்தியாவில் இறந்துபோன திரு. பழனி அப்பன் செட்டியார் எவருடைய பெயருக்குமே எழுதாத குறித்த சொத்துக்கள் அரசாங்கத்திற்குரியதென பலாங்கொடை உதவி அரசாங்க அதிபர் தீர்மானித்துள்ளாரா?

குறித்த சொத்துக்கள் தொடர்பாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா? அவ்வாறெனில், அந்த நடவடிக்கை என்ன? குறித்த சொத்துக்களின் உரிமையை, பொய்யான உரிமையாளரிடமிருந்து அகற்றி, அவற்றை பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் கையளிக்க உடனே நடவடிக்கை எடுப்பாரா? அவ்வாறெனில் எப்போது? இன்றேல் ஏன்?

## கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கவிழா

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் வருடாந்த கலைவிழாவும், இளந்தென்றல் மலர் வெளியீடும் பல்கலைக்கழக புதிய கலைஅரங்கில் செல்வன் நா. ஜெகராஜசிங்கம் தலைமையில் இம்மாதம் 13-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பாரிஸ்டர் என். சத்தியேந்திரா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கவியரங்கம், வழக்காடுமன்றம், இசைக்கச்சேரி, பரதநாட்டியம், நாடகம், வில்லுப்பாட்டு ஆகிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (மா)


றீகல் (யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
KIRK DOUGLAS—RICHARD HARRIS in
The Heroes of Telemark
War Film—Color
11-6-82 முதல் ஸ்ரீதரின்: (Color)
மோகனப் புன்னகை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-லக்ஷ்மி-முத்துராமன்
கனிமுத்துபாப்பா (புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
4-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
★ கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
தொடர்ந்து ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
3-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
சுவப்ணு, தேங்காய்,
தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

ஸ்ரீதர் தினசரி 10-30, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்) சனி, ஞாயிறு 2-30க்கும்
7-th and 8 DIAMONDS
From 14-6-82
THE OTHER SIDE OF MIDNIGHT

ராணி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
Walt Disney's
Cat From The Outer Space


# "அரசின் உதவிகளை எதற்கும் எதிர்பார்க்கக்கூடாது"

## என்கிறார் கோப்பாய் எம். பி. ஆலால்

[யாழ்ப்பாணம்]

''தமிழினத்தைப் பொறுத்தவரையிலே எல்லா உதவிகளுக்கும் அரசினரை நம்பியிருக்கக் கூடாது. நாமும் தொழிற்கல்வி முறைகளை ஏற்படுத்தி அவ்வழியில் எதிர்காலச் சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்தவேண்டும். இந்நிலையை ஏற்படுத்தினால் தான் எதிர்காலச் சந்ததியினர் பொருள் வளம் நிறைந்தவர்களாக வாழமுடியும்''

இவ்வாறு நேற்று முன் தினம் யாழ். பழம்றோட் கந்தர் மடம் ''ஞானஜோதி'' சன சமூக நிலைய 15வது ஆண்டு நினைவு விழாவில் விசேட விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. குணரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டம் சிறுமிகளின் நிலையக் கீதத்துடன் ஆரம்பமானது. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்நிலையத்தின் வளர்ச்சிக்கு உழைத்த காலஞ்சென்ற சின்னத்தம்பி துரை என்பவருக்கு அவரது ஆத்மசாந்திக்காக இரு நிமிட நேர மௌனஞ்சலி செலுத்தப்பட்டது. வரவேற்புரையை நிலையப் போஷகரும் சமாதான நீதிபதியுமாகிய திரு. இ. இராசு நிகழ்த்தினர்.

திரு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

எங்கள் பிள்ளைகளுக்கு நகையும் நட்டும் வாங்கிவிட்டால் மட்டும் போதாது; அவர்களை பட்டினி கிடந்தாவது பாடசாலைக்கு அனுப்பி படிப்பித்து வைக்க வேண்டும். இவ் விடயத்தில் இப்படியான நிலையங்கள் முன்னின்று உழைக்க வேண்டும். இலவசமாக தருகின்ற உணவு முத்திரை தொடக்கம் திரிபோஷா மாவு வரையில் எல்லாவற்றையும் இலவசமாக பெற்றுத்தான் வாழவேண்டும் என எண்ணுது ஏதோ ஒரு வகையில் தொழிற்கல்விமுறைகளை ஏற்படுத்தவேண்டும். அவ்வழியில் செயற்பட அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

யாழ் அபிவிருத்திச்சபை உபதலைவர் திரு. எஸ். நாகராசா, மற்றும் யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. ஆ. துரைராஜசிங்கம் அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரம் சட்டத்தரணி ப. ஸ்ரீபதி துர்க்கா கலைஇலக்கிய பத்திரிகையின் ஆசிரியர் எஸ். கே. யோகநாதன், நல்லூர்த்தொகுதி கூட்டணி அமைப்பாளர் திரு. வே. அப்பையா, திரு. செ. து தெட்சணமூர்த்தி, செல்வி கு. அமுதா, திரு. க. வேலாயுதபிள்ளை ஆகியோரும் உரையாற்றினர். வெற்றியீட்டிய வீரர்களுக்கு திருமதி நாகராசா பரிசில்களை வழங்கினர். விழாவின் இறுதியில் மூன்று நாடகங்களும் இடம் பெற்றன. (டா)

## இ. சே. மன்றத்தின் இளைஞர் விழா

[வேலணை]

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வருடாந்த இளைஞர்விழா எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் மாவட்ட ரீதியாகவும், தொகுதி ரீதியாகவும் விளையாட்டுப் போட்டிகளும், கலை, கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருப்பதுடன் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி, ஆண்களுக்கிடையிலான 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, பெண்களுக்கிடையிலான 7 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி. மரதன் ஓட்டப் போட்டி, தாச்சிப்போட்டி, வேகநடைப்போட்டி, கிறீஸ் கம்பம் ஏறும்போட்டி, விநோத உடைப்போட்டி என்பனவும் இடம்பெறவிருக்கின்றன.

விழாவிற்கானசகல ஏற்பாடுகளையும் சாவகச்சேரித்தொகுதி இளைஞர் சேவை மன்ற அலுவலர் செல்வி வ. விமலேஸ்வரியும், கிளிநொச்சித் தொகுதி இளைஞர்சேவை மன்ற அலுவலர் திரு கு. பரராசசேகரமும் கவனித்து வருகின்றார்கள். [கு]

## ஊறணிபுனித அந்தோனியார் திருவிழா

[யாழ்ப்பாணம்]

ஊறணி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இம்மாதம் 12-ம் திகதி பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மறுநாள் 13-ம் திகதி காலை கூட்டுப் பலிப்பூசையுடன் திருச்சொரூப பவனி இடம்பெறவுள்ளது.

பங்குத்தந்தை அருட்திரு. இ. தி. தேவராசா அடிகள் கொடியை ஏற்றி வைப்பார். அடுத்து புனித அந்தோனியார் திருச்சொரூப சுற்றுலாவும் இடம்பெறும்.

ஆலய கட்டிடத்தை புனரமைக்க பங்குத்தந்தை நிதி உதவி வழங்குமாறும், கட்டிட வேலைகளை சிரமதான முறையில் செய்துதருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

## திருவள்ளுவர் மகாசபையின் 32-வது மாநாடு

[அரியாலை]

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் முப்பத்திரண்டாவது வருடாந்த மாநாடு இம்மாதம் 27ந் திகதி கோண்டாவிலில் நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டிற்கு பிரதம அதிதிகளாக யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் எம். பி., யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா. யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா, முன்னுள் யாழ். அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோர்கள் கலந்துகொள்கின்றனர்.

மாநாட்டையொட்டி மகாசபையினல் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சு, கட்டுரை, திருக்குறள் மனனப்போட்டிகள் இம்மாதம் 20-ந் திகதி அரியாலையில் நடைபெறவிருக்கிறது. மாநாட்டுக்கான ஏற்பாடுகளை மகாசபை பொதுச் செயலாளர் திரு கே. கிருஷ்ணராசா செய்துவருகிறார். [கு]

# பாதுகாப்புச் சேவையினர் மடக்கிப்பிடித்தனர்

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலியைச் சேர்ந்த இடைக்காடு – வளலாய்– கிராமப் பாதுகாப்புச் சேவையினர் இப்பகுதிகளில் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களைத் தவிர்க்கும் முகமாக இரவு முழுவதும் காவல் செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கிராமப் பாதுகாப்புச் சேவையில் 100 பேர் பணியாற்றுகின்றனர்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஹெட்டி ஆராச்சி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஐயாத்துரை ஆகியோரின் அனுசரணையுடனும், ஆலோசனையுடனும் இப்பாதுகாப்புச்சேவை இயங்கிவருகிறது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கணேசு தவநேசன் [20வயது], தலைமன்னாரைச் சேர்ந்த வில்பட் [44வயது], மண்கும்பானைச் சேர்ந்த முகம்மது பாருக் [35வயது] ஆகிய மூவருமே பாதுகாப்புச் சேவையினரால் பிடிக்கப்பட்டு, காங்கேசன்துறை பொலிசில் ஒப்படைக்கப்பட்டனர்.

இம் மூவரும் முன்னர் தம்பாலை என்னுமிடத்தில் முகமூடி அணிந்து துப்பாக்கி முனையில் 30 ஆயிரம்ரூபா கொள்ளை அடிக்கப்பட்ட வீட்டுக்கு அண்மையில் நடமாடியபோது பாதுகாப்புச்சேவையைச் சேர்ந்தவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

வில்பட் என்பவர் மகர சிறைச்சாலையிலிருந்து மூன்று தினங்களுக்கு முன்னர்தான் வெளியேறிவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் அணிந்திருந்த சேட் பொக்கட்டிலிருந்து சிறைச்சாலையிலிருந்து வெளியேறி மன்னாருக்குச் செல்வதற்கான சிறைச்சாலை திணைக்கள புகையிரத வாரண்ட் டிக்கட் இருக்கக் காணப்பட்டதாம்.

இம்மூவரையும் காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபொழுது, நீதிபதி திரு. சி.வி. விக்னேஸ்வரன் இரு வாரங்களுக்கு றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (மா)

## டிக்கட் இன்றி பயணம்செய்த 73,446 பேர் கைது

புதுடில்லி, ஜூன், 6

பாரதத்தில் கடந்த வருடம் 73,446 பேர் டிக்கட் இல்லாமல் ரயிலில் பிரயாணம்செய்தபோது ரயில்வே பகுதி அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து அபராதமாக 1 லட்சத்து 17 ஆயிரம் ரூபா வசூல்செய்யப்பட்டது. 6684 பேர்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 2969 பேர் சிறைத்தண்டனை பெற்றனர் என புதுடில்லி அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## இப்படியும் நடக்கிறது

தேர்தல் காலத்தில் பல தில்லுமுல்லுகள் நடப்பது 'இயற்கை.'

வாக்காளர் மாருட்டம், அபேட்சகர் மாருட்டம் என்று பலவகையான ஆள் மாருட்டங்கள் நடைபெறும். ஆனல் கூட்ட மாருட்டமும் நடப்பதுண்டா?

கடந்த முதலாம் திகதி தந்தை செல்வா நினைவாலயத்திலும், யாழ். பொது நூல் நிலையத்திலும் உண்ணாவிரதம் நடைபெற்றது.

உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளச் சென்ற ஒரு பிரமுகர் மறந்துபோய் மாற்றுக்கட்சி உண்ணாவிரதத்தில் கால் மணிநேரம் இருந்துவிட்டார். உண்ணாவிரத ஏற்பாட்டாளர்களில் ஒருவர் ''உங்களை இறைவன்தான் இங்கு அனுப்பி வைத்திருக்கிருர்'' என்று சொன்னதும்தான் அப்பிரமுகர் 'திரு திரு' என்று விழித்துக்கொண்டு அங்கிருந்து நழுவி விட்டார்!

அப்பிரமுகர் யாழ். எம். எம். சி. என்று மட்டும் உங்களுக்கு சொல்லிவைக்கின்றேன்.

'ஊடுருவி'

## வட இலங்கை சங்கீதசபை பொன் விழா

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை சங்கீத சபையின் பொன்விழா இம்மாதம் 10ம் திகதி மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

சங்கீத சபையின் தலைவரும், வடமாநிலக் கல்விப் பணிப்பாளருமான திரு கே. சிவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கமும், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் விழாவில் பொன்விழா மலரும் வெளியிடப்படும். உபதலைவர் திரு ராம் குமாரசாமி நன்றியுரை நிகழ்த்துவார்.

சங்கீதக்கச்சேரி, பரதநாட்டியம், நாட்டிய நாடகம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. [மா]

## புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் காலமானர்

புதுடில்லி. ஜூன், 6

புதுச்சேரி முன்னாள் முதலமைச்சரும், பழம்பெரும் காங்கிரஸ்வாதியுமான திரு. வி. வெங்கடசுப்பு ரெட்டியார் தமது 73வது வயதில் நேற்று காலமானர்.

இவர் இளைஞராக இருந்தபோது பிரான்ஸ் அரசுக்கு எதிராக தமது கிராமத்தில் ஒரு விடுதலை அரசை உருவாக்கி, சுமார் 10 மாதங்கள் பிரான்ஸ் அரசுக்கு எதிராக ஆட்சி நடத்திவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## குடும்பத் தகராறு: இளம்பெண் தற்கொலை

(கிளிநொச்சி)

குடும்பத்தகராறு காரணமாக அண்மையில் திருமணம் செய்துகொண்ட இளம்பெண் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

கரியாலை நாகபடுவானைச் சேர்ந்த சு. இராசேஸ்வரி என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கரியாலை – நாகபடுவான்பகுதிமரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. ரி. இராஜேந்திரன் மேற்கொண்டார்.

சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸ் உத்தியோகத்தர் எம். கணேசதுரை ஆஜர்செய்தார்.

துரைசிங்கம், எஸ். அற்புதலிங்கம் ஆகியோரும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (க–வெ)

## 50 வீடுகள் தீக்கிரை

சென்னை, ஜூன் 6

வேதாரணியத்திற் கருகில் நிகழ்ந்த தீவிபத்தில் 50வீடுகள் தீக்கிரையாகின. சில கடைகளும் எரிந்து சாம்பராயின. இத் தீவிபத்தில் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் தீக்கிரையாகின.

ஆந்காட்டில் நடந்த மற்றொரு தீவிபத்தில் 12 வீடுகள் எரிந்து சாம்பலானது.

## கொட்டகை தீக்கிரை; எதிரிகள் றிமாண்டில்

(சாவகச்சேரி)

பூப்புனித நீராட்டுக் கொட்டகை எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக எதிரிகள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 82 மே 11ல் கெருடாவிலைசேர்ந்த செல்லன் கந்தசாமிஎன்பவரது பூப்புனித நீராட்டு கொட்டகையை அவ்வூரைச் சேர்ந்த இராசையா பாலன், இராசையா சிறியன் என்பவர்கள் எரித்ததினுல் சுமார் 30,000 ரூபா சேதம்ஏற்பட்டதென குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டபொழுதே நீதிபதி அவர்களை ஜூன்16ம்தேதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

பூப்புனித நீராட்டுக் கொட்டகையோடு கம்பளங்கள், குத்துவிளக்குகள், சைக்கிள், பெற்ரேல்மாக்ஸ், மணவறை உட்பட பல பொருட்கள் எரிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## நேர்மையான...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள 'வீரகேசரி' நிருபர்' அமரர் எஸ். செல்லத்துரையின் இல்லத்திற்கு நேற்றுச் சென்று அன்னரின் குடும்பத்திற்கு நேரில் ஆறுதல் கூறினர்.

''யாழ்ப்பாணத்தில் நானறிந்தவரை அமரர் செல்லத்துரை ஒரு நேர்மையாளராக பணியாற்றினர்'' என்று டி, ஐ ஜி. சுந்தரலிங்கம், திருமதி செல்லத்துரையிடம் கூறி ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார்.

## கிளைகள் புனரமைப்பு

(நயினதீவு)

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கிராமங்கள் தோறும் கிளைகளைப் புனரமைப்புச் செய்துவருகின்றனர். இதன் ஓர் அம்சமாக நயினதீவில் கூட்டணியில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.


## வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பபுளர் (Bubblers), ஹெல்ப்பர் (Helpers), புளோவர் (Blowers) போன்றவர்கள் தேவை.

அனுபவமுள்ள Bottle and Press Mechine இயக்குநரும், ஹெல்ப்பரும் தேவை.

நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.

உடனே நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**

**நீர்வேலி.**

3406


## தொகுதி அபிவிருத்தி பற்றி கைநூல்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத் தொகுதியில் 1977ம் ஆண்டு தாம் எம். பி யாகப் பதவி ஏற்ற காலம் தொடக்கம் இதுவரை காலமும் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்தி வேலைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றை வெளியிடுவதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

1977ம் ஆண்டு முதல் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ததன் மூலம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட மின் விநியோகத் திட்டங்கள், பாடசாலைக் கட்டிடங்கள், வீதி திருத்தவேலைகள் ஆகியன உட்பட மற்றும் பல அபிவிருத்தி வேலைகள் பற்றிய விபரங்கள் இந்த கைந்நூலில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் செல்லையா (உபாத்தியாயர்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்கானை வாசியும், சங்கானை முன்னாள் பட்டினசபைத் தலைவரும், இளைப்பாறிய தலைமை ஆசிரியருமாகிய திரு. வி. செல்லையா அவர்கள் 5–6–82ல் சிவபதமடைந்துவிட்டார். இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், குகநாதன் (திரைப்பட இயக்குநர், சென்னை), மீனலோஜனி, வாமனனந்தன் (சவூதி அரேபியா), வரதானந்தன், நல்லையானந்தன் B. Sc., அயிலானந்தன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ஜெயா குகநாதன் (சென்னை), தருமலிங்கம் (விரிவுரையாளர் பயிற்சிக் கலாசாலை, கடற்றொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), திருமதி ரோகாணி, திருமதி செந்தில் செல்வி (சங்கீத ஆசிரியை, கிளிநொச்சி) ஆகியோரின் அருமை மாமனாரும், கலையருள், ஷியாமினி, குலேந்தினி ஆகியோரின் அருமைப் பாட்டனருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் வானொலி மூலம் அறிவிக்கப்படும்.

செ. நல்லையானந்தன் (மகன்)

''இராசஸ்தான்''
சங்கானை.

3475


## ஹோம் பிறன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான

**ORION-12''** (T. V. BLACK and WHITE)

விற்பனைசெய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்

**விலை ரூபா 2100 -மட்டுமே**

எம்மிடம் உள்ள அவசர தேவையான மற்றைய பொருட்கள்

HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES – மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமை காரியாலயம்:
ஹோம் பிறன்ஸ் லிமிட்
இல. 463, காலி வீதி,
கொழும்பு—3
தொலைபேசி;58910

கிளை காரியாலயம்:
ஹோம் பிறன்ஸ் லிமிட்
இல. 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8310


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூன் மீ 7–ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.